2004 ஜூலை 27]

சூழ்நிலையாலும், 110 கோடி ரூபாய் நிதியைத் திரட்ட முடியாதிருக்கின்ற சூழ்நிலையின் காரணமாகவும் அதனை நவீனப்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே புதிய சிமெண்ட் தொழிற்சாலைகளைத் தொடங்குகிற திட்டம் ஏதேனும் உள்ளதா? தனியார் புதிய சிமெண்ட் தொழிற்சாலைகளைத் தொடங்க...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்விக்கு சம்பந்தமற்றது.

வினா எண் 34, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

34—

நிலவள வங்கி

***23163**—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் கல்வராயன் மலை ஒன்றியத்தில் வெள்ளி மலையில் நிலவள வங்கி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.